**தலைப்பு 121 – உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 121 – உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் அறிக்கை, ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 26 ஆம் திகதியன்று அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இனக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் பரிசீலனைகளது பரப்பெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணி, ஏனைய வளங்கள், நேரம் எனும் வரம்பிற்குட்பட்ட இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக் கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இனக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 148,149,150,152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்பப் பேனப்படுதல், தயாரிக்கப்படுதல், நியாயப்பூர்வமாக சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயப்பூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பவற்றிற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

அமைச்சிற்கென ஒதுக்கப்பட்ட மொத்த நிகர நிதியேற்பாடு ரூபா 22,206.86 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டினது இறுதியளவில் அதில் ரூபா 13,617.82 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சிற்கென ஒதுக்கப்பட்ட மொத்த நிகர நிதியேற்பாட்டில் ரூபா 8,589.04 மில்லியன் அல்லது 38.68 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்பு, நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | நிகர நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டு வருவன | 9,440.88 | 7,602.39 | 1,838.49 | 19.47 |
| மூலதனம் | 12,765.98 | 6,015.43 | 6,750.55 | 52.87 |
| மொத்தம் | 22,206.86 | 13,617.82 | 8,589.04 | 38.68 |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

வருமானச் சுட்டிலக்கம் 10.03.07.99 தொடர்பாக 2016 ஆம் ஆண்டிற்கென அமைச்சினால் மதிப்பீடு செய்யப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 169.82 மில்லியனாகும். மீளாய்வாண்டின்போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 199.69 மில்லியனாகும். இது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 117.60 சதவீதமாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வருமானச் சுட்டிலக்கம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | அதிகரிப்பு/குறைவு, மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | அதிகரிப்பு/ குறைவு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10.03.07.99 | 169.82 | 199.69 | 29.87 | 17.60 |

## 2.3. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 12101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாகப் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய எல்லை | உள்ளபடியானது | அதி குறைந்த எல்லை | உள்ளபடியானது | அதி கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 300.00 | 295.53 | 180.00 | 188.39 | 700.00 | 389.54 |

## 2.4 கட்டு நிதிக் கணக்கு

அமைச்சின் கீழான 7002/0000/00/0061/0016/000 ஆம் இலக்கச் கட்டு நிதிக் கணக்கில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 660,552 மீதி அவதானிக்கப்பட்டது.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழான 05 வைப்புக் கணக்குகளின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 6.41 மில்லியன் கூட்டுத் தொகையாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0016/0070/000 | 12,432 |
| 6000/0000/00/0001/0091/000 | 68,000 |
| 6000/0000/00/0013/0081/000 | 328,881 |
| 6000/0000/00/0002/0121/000 | 5,043,412 |
| 6000/0000/00/0008/0012/000 | 955,688 |
| | 6,408,413 |

**2.6 கணக்காய்வு அவதானிப்பு**

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளுள் போதியளவானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. போதியளவானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணுதல்

அமைச்சு பின்வரும் பதிவேடுகளைப் பேணியிராததுடன், சில பதிவேடுகளை நாளதுவரையாகப் பேணியிராமையும் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணங்கள் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | கணனிகள், துணைப் பாகங்கள், மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய 1A1/2002/02 ஆம் இலக்கத் திறைசேறிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை |
| (ஆ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்படவில்லை |
| (இ) | இழப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்படவில்லை |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதனச் செலவின விடயங்கள் 03க்கென ஒதுக்கப்பட்ட மொத்த நிகர நிதியேற்பாடாகிய ரூபா 5,700,000 முற்றாக சேமிப்புக்குள்ளானது.

(ஆ) மீண்டுவரும் மூலதனச் செலவின விடயங்கள் 14க்கென கூடுதலாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதால், ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்தியதன் பின்னரான

சேமிப்பு ரூபா 7,722.67 மில்லியனாகும். இது அச் செலவின விடயங்களுக்கான நிதியேற்பாட்டில் 18 முதல் 99 சதவீதம் வரையிலானது.

## 3.3 வருமானக் கணக்கு

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் எனும் விதத்தில் அமைச்சின் செயலாளருக்கு 10-3-07-99 ஆம் வருமானச் சுட்டிலக்கத்திற்குறிய வருமானத்தை மதிப்பிடல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கிலிடுதல், கணக்குகளைச் சமர்ப்பித்தல் எனும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அக் கணக்காய்வுச் சுட்டிலக்கம் தொடர்பான கணக்காய்வுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

மீளாய்வாண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் சுட்டிலக்கங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானச் சேகரிப்பு ரூபா 169.82 மில்லியனாகும். சேகரிக்கப்பட்டது ரூபா 199.69 மில்லியனாகும். மாவட்டச் செயலகமும் பிரதேச செயலகங்களும் சேவை நாடுநர்களது தேவைகளுக்கேற்ப வழங்கும் மாதாந்த வருமானச் சான்றிதழ்கள், வருடாந்த வருமானச் சான்றிதழ்கள், பெறுமதிச் சான்றிதழ்கள், அனுமதிப்பத்திரங்களது பிரதிகளுக்கு அறவிடும் கட்டணம் என்பவற்றின் மூலம் சேகரிக்கப்படும் வருமானம் அதிகரித்தமையால் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 117 சதவீத வருமானத்தைச் சேகரிக்கக்கூடியவாறிருந்தது. எவ்வாறாயினும், மூல மதிப்பீட்டைத் திருத்தியமைத்த 4 பிரதேச செயலகங்களைப் போன்றே மூல மதிப்பீட்டைத் திருத்தியமைக்காத மற்றுமொரு பிரதேசச் செயலகத்தினது மதிப்பீடு செய்யப்பட்ட வருமான இலக்கைப் பூர்த்தி செய்ய இயலாது போனது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 12101 எனும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 10,306,649 ஆகும். அக்கடன் நிலுவை மீதிகளது காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாததுடன், அக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியுமிருந்தது.

(ஆ) 20 மாவட்டச் செயலகங்களினது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்குரிய திறைசேரி மற்றும் திணைக்கள ஏடுகளுக்கிடையேயான மீதிகளுக்கிடையில் ரூபா 287,150 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) அங்கத்தவர் கடன் பதிவேடு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் பிரகாரம் 10 உத்தியோகத்தர்களது தனிப்பட்ட கடன் மீதிகளது கூட்டுத் தொகையில் ரூபா 119,263 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) வேலை இடமாற்றத்திற்குள்ளாகி 15 மாவட்டச் செயலகங்களுக்கு வருகை தந்திருந்த உத்தியோகத்தர்களது கடன் மீதியாகிய ரூபா 6,158,294 பொறுப்பேற்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராததுடன், இடமாற்றத்திற்குள்ளாகி அமைச்சுக்கு வருகை தந்த 06 உத்தியோகத்தர்களின் கடன் மீதியாகிய ரூபா 38,500 பொறுப்பேற்கப்பட்டு அதனைத் தவனை ரீதியில் அறவிடுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2008 டிசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையிலிருந்து விலகியவாறு ரூபா 250,000 வரம்பிற்கு மேலாக ஒரு உத்தியோகத்தருக்கு இடர்க் கடனாக ரூபா 253,780 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**3.5.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினது அமைப்புக் கூற்று, அங்கிகரிக்கப்பட்ட பதவியணி போன்ற தகவல்களை உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

**3.5.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று நிறுவப்பட்டிருந்த போதும், பதவியணியில் நிலவிய வெற்றிடங்கள் கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தடையாக அமைந்தன.

**3.5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

மீளாய்வாண்டின்போது 02 முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடைபெற்றிருந்தன. எனினும், கணக்களி உத்தியோகத்தரது போதிய பங்களிப்பின்மையால் குழுக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பபடும் தீர்மானங்கள் அமுலாகியமை தொடர்பாக திருப்தியுற முடியாதிருந்தது.

**3.6 சொத்து முகாமைத்துவம்**

அமைச்சினது சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 1,031.33 மில்லியன் பெறுமதியான பொருட்கள் சம்பந்தமாக 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு அவ்வறிக்கையை 2017 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், 2017 யூன் 28 ஆந் திகதியன்றே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 3.1.4 க்கமைய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளது குறைவுகளும் மேலதிகங்களும் சம்பந்தமான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து 3.1.5 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வாண்டினது மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் தெரிய வந்த 12 பிரிவுகளின் 133 பொருட்களது மேலதிகம் மற்றும் 12 பிரிவுகளது 370 பொருட் குறைவு சம்பந்தமாகச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**(ஆ) வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சிற்குச் சொந்தமான டபள் கெப், டிபென்டர் வாகனம் என்பவற்றை முன்னாள் பிரதியமைச்சர் ஒருவர் எடுத்துச் சென்றிருந்தார். அவ்விரு வாகனங்களையும் குறித்த அமைச்சில் ஒப்படைப்பதற்கு அல்லது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**(இ) சுவீகரிக்கப்படாத சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்தல்**

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் மீளாய்வாண்டின்போது ரூபா 39,641,418 பெறுமதியான நடைமுறையல்லாத சொத்துக்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் மாற்றங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தபோதும், அவற்றை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுவீகரித்திருக்கவில்லை.

**(ஈ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சினது ஓராண்டிற்குக் குறைவான தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகளது பெறுமதி ரூபா 53.15 மில்லியனாகும்.

(ii) நிதிப் பிரமாணம் 94 இல் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 08 செலவின விடயங்களது நிகர நிதியேற்பாட்டிற்கு அதிகமாக ரூபா 16.17 மில்லியனுக்கான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

**3.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

அமைச்சினது 06 வாகனங்கள் 13 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகி அதன் காரணமாக ரூபா 3,810,988 இழப்புத் தொகையாக அறவிடப்பட வேண்டியிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 104,105 என்பவற்றின் பிரகாரம் விசாரணைச் சபை அமைக்கப்பட்டு விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படாததுடன், பொறுப்பானவர்களிடமிருந்து இழப்பை அறவிடுவதற்கோ அல்லது அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ இல்லை.

**3.8 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

**(அ) போதியளவு நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

பிரதான பணிகளை அமைச்சு போதியளவு நிறைவேற்றியிருக்கவில்லை. அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

(i) சிலாபம், கதிர்காமம், உக்குவெல, கறுவலகஸ்வெவ பிரதேச செயலகங்களது கட்டிட நிர்மான வேலைகள் மற்றும் பிபிதெமு பொலனறுவை நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கு முறையே ரூபா 69.13 மில்லியன் மற்றும் ரூபா 9,400 மில்லியன் நிதியேற்பாடுடன் அவற்றை அமுலாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அந்நிகழ்ச்சித்திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம் 0 முதல் 65 சதவீதம் வரையாக இருந்ததால் எதிர்பார்த்த பணி போதியளவு நிறைவேறவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ii) தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவி என்பவற்றிற்கு ஆட்சேர்ப்பு விதிமுறைகளைத் திருத்தி அமைப்பது மற்றும் மாகாண மட்டத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் தொழில்நுட்ப உதவியாளர்களையும் பயிற்றுவிப்பதற்கான

நிகழ்ச்சித்திட்டங்களும் திட்டமிடப்பட்டிருந்த போதும் அவை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 முகாமைத்துவ நலிவுகள்**

மீளாய்வாண்டின்போது ரூபா 43.79 செலவில் கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்கு நடாத்தப்பட்ட பரீட்சை சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டின்போது நிலவிய ஏறக்குறைய 1,000 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2016 பெப்ரவரி 12 ஆந் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டிருந்தது. 2016 செப்டம்பர் 03 ஆந் திகதி நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் 2016 நவம்பர் இறுதியளவில் வழங்கப்பட இயலும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்திருந்தார். எவ்வாறாயினும், பரீட்சை நடைபெற்று 10 மாதங்களாகியும் ஆட்சேர்ப்பிற்குத் தேவையான நடவடிக்கைகள் 2017 ஜூலை 31 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தன.

(ஆ) மக்களுக்கு மிகவும் நெருக்கமான அரசாங்க சேவையை நிறுவுதல் மற்றும் அதனைப் பேணுதல் என்பவற்றை நிறைவேற்றுதல் என்பன அங்கீகரிக்கப்பட்ட 14,022 உத்தியோகத்தர்களில் 2017 ஏப்ரல் மாதமளவில் நிலவிய ஏறக்குறைய 2,000 வெற்றிடங்கள் காரணமாகத் தடையாக அமைந்தது. 03 மாத காலத்திற்கு ஓய்வுபெற்ற 79 கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் செயலாளர் அறிவித்திருந்தார்.

**3.10 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியின் நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 30 | 22 | 08 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 04 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 155 | 127 | 31 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 75 | 65 | 10 | - |
| | மொத்தம் | 267 | 218 | 52 | 03 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின்போது பொறுப்பேற்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 15,639 உத்தியோகத்தர்களை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இணைத்துக் கொள்வதற்கான முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான 52 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை மட்டத்தில் 30 சதவீத வெற்றிடங்கள் நிலவியமையும் அவதானிக்கப்பட்டது.